## நோன்பு நோற்கவேண்டியத் தேவையில்லாதுபோகும் காரணங்கள்

*இஸ்லாம் எளிமையான, ஒருவருடைய ஆற்றலுக்குட்பட்டவற்றையே கடமையாக்கும் எளிய மார்க்கமாகும். அல்லாஹ் அதஆலா கூறுகிறான்:*

يُرِيدُ ٱللَّهُ بِكُمُ ٱلْيُسْرَ وَلَا يُرِيدُ بِكُمُ ٱلْعُسْرَ ﴿١٨٥﴾ البقر 85. )

*பொருள்: அல்லாஹ் உங்களுக்கு இலகுவாக்குவதை விரும்புகிறான், அவன் உங்களுக்குக்குக் கஷ்டத்தைத்தரவிரும்பவில்லை(அல் பஃகரஹ்:185)*

*மனிதன் சில நேரங்களில் பல்வேறு நிலைகளுக்கு ஆளாக்கப்பட்டுவிடுகிறான், அந்நிலைகளில் மார்க்கச்சட்டம் (ஷரீஅத்) அவனுக்கு விதிவிலக்கு அளித்துவிடுகின்றது, அவன்மீது நோன்பு கட்டாயமான ஒன்றாக இருப்பதில்லை. அவை கீழ்வருமாறு:*

**1 பிரயாணம்** *அல்லாஹ் தஆலா கூறுகிறான்:*

فَمَن كَانَ مِنكُم مَّرِيضًا أَوْ عَلَىٰ سَفَرٍ فَعِدَّةٌ مِّنْ أَيَّامٍ أُخَرَ ۚ ﴿١٨٤﴾ البقر 84. )

*பொருள்: ஆனால், (அந்நாட்களில்) உங்களில் எவரேனும் நோயாளியாகவோ, பயணத்திலோ இருந்தால், அவர் (நோன்பு நோற்காமல்) மற்ற நாட்களில் கணக்கிட்டு நோற்றுக்கொள்ளவேண்டும் (அல் பஃகரஹ்:184). திருக்ஃகுர்ஆன் மற்றும் நபிமொழிகளில் தெளிவான முறையில் பிரயாணம் மேற்கொள்ளும் இடத்தின் தூரத்தை நிர்ணயித்துக் கூற வில்லை, இருப்பினும், சில மார்க்கச்சட்ட அறிஞர்கள் அதனை 98 கிலோ மீட்டர் அளவிலான தூரமாகக் குறிப்பிடுகின்றனர்.*

**2 நோய்வாய்ப்படுதல்** *நோய்வாய்ப்படுவது என்றால், எந்த நோயின் காரணமாக நோன்பு நோற்பது மிகவும் இயலாத ஒன்றாக ஆகிவிடுகிறதோ, மற்றும் அதன் காரணமாக உயிருக்கே ஆபத்து என்ற அச்சம் உள்ளதோ அல்லது நோன்பின் காரணமாக அந்த நோய் தீவிரமடையும் அச்சம் இருந்தாலோ அல்லது நோயிலிருந்து நிவாரணம் பெறுவதில் பின்னடைவு ஏற்படும் என்று பயப்படுவது ஆகிய நிலைகள். இவ்வாறான ஒன்றைக் காரணம் காட்டி நோன்பு நோற்பதிலிருந்து ஒருவர் தப்பித்துக்கொள்ள முயற்சிக்கக்கூடாது, ஏனெனில், அல்லாஹ் மனதில் ஏற்படும் நிலைகளை நன்கறிபவனாக இருக்கின்றான்.*

**3, 4 கர்ப்பம் மற்றும் குழந்தைக்குப் பாலூட்டும் நிலை** *கர்ப்பிணியானஒரு பெண் அல்லது தன்னுடைய குழந்தைக்குப் பாலூட்டும் ஒரு பெண் தன்*

www.uzairfalahi.com

னுடைய அல்லது தன் குழந்தையின் ஆரோக்கியத்திற்கு பாதகம் ஏற்படும் என்று அஞ்சினால் ஷரீஅத் இந்நிலைகளில் அவர்கள் நோன்பு நேற்கவேண்டாம் என அனுமதியளித்திருக்கின்றது. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

إِنَّ اللَّهَ تَعَالَى وَضَعَ عَنِ المُسَافِرِ الصَّوْمَ، وَشَطْرَ الصَّلَاةِ، وَعَنِ الحَامِلِ أَوِ المُرْضِعِ الصَّوْمَ أَوِ الصِّيَامَ ِ أصحاب السنن )

*பொருள்: அல்லாஹ் தஆலா பிரயாணம் மேற்கொண்டிருப்பவர்கள் மீதிருந்து நோன்பின் கடமையை அகற்றி தொழுகையையும் பாதியாகக் குறைத்துள்ளான், அவ்வாறே, கர்ப்பிணியான பெண் அல்லது பாலூட்டும் தாய் மீதிருந்தும் நோன்பு அல்லது நோன்புகளை (விலக்கியிருக்கின்றான்).*

5 **முதுமை** அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

وَعَلَى ٱلَّذِينَ يُطِيقُونَهُۥ فِدْيَةٌ طَعَامُ مِسْكِينٍ ۖ ﴿١٨٤﴾ البقر 184 )

*பொருள்: நோன்பு நோற்க சக்தி பெற்றிருப்பவர்கள் (நோற்காமல் விட்டுவிட்டால் அவர்கள்) மீது ஃபித்யா (பரிகாரம்) கடமையாகின்றது (அல் பஃகரஹ்:184).* ஒரு நோன்பிற்கான ஃபித்யா ஒரு ஏழைக்கு உணவளிப்பதாகும்.

6 **ஒருவர் நோன்பை விட்டுவிடும்படி கட்டாயப்படுத்தப்பட்டுவிட்டால்** அவருக்கும் அனுமதி உண்டு.

**நோன்பை முறிக்கும் விஷயங்கள்**

1 **தெரிந்தே எதையும் சாப்பிடுதல் அல்லது குடித்தல் அல்லது ஷரீஅத் அடிப்படையிலான காரணம் ஏற்படுதல்** உதாரணமாக, நோய், பிரயாணம் அல்லது கட்டாயப்படுத்தப்படுதல்.

2 **உடலுறவு**

3 **வேண்டுமென்றே வாந்தி எடுத்தல்**

4 **மாதவிடாய் அல்லது பின்ளைப்பேறுகால இரத்தப்போக்கு** ஒரு பெண்ணுக்கு பகல் நேரத்தில் இரத்தப்போக்கு ஏற்பட்டால் அவளுடைய நோன்பு முறிந்துவிடும்.

5 **எந்த ஒரு பொருளும் வாய் வழியாக வயிற்றில் சென்றுவிடுதல்** அது ஒரு சிறு கல்லாக இருந்தாலும்சரியே.

www.uzairfalahi.com

**6** **நோன்பு முறிக்கும் எண்ணம் (நிய்யத்) ஏற்படுதல்** ஒருவர் சாப்பிடாமலும் குடிக்காமலும் இருந்துவிட்டாலும் சரியே, ஏனெனில், நிய்யத்து என்பது நோன்பிற்கான ஒரு நிபந்தனையாக இருக்கின்றது.

**7** **நோய் அல்லது வேறு காரணமுமின்றி இன்ப உணர்வுடன்** இந்திரியம் வெளியாகிவிடுதல்.

**விடுபட்ட நோன்புகளை நிறைவேற்றுதல் (ஃகஜ்தா செய்தல்)** ரமஜ்தான் மாத நோன்பில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நாட்களின் நோன்பு ஏதோ காரணத்தினால் விடுபட்டிருந்தால் அதனை மீண்டும் நிறைவேற்றவேண்டும் (ஃகஜ்தா செய்யவேண்டும்).

**விடுபட்ட நோன்புகளை நிறைவேற்றுவதற்கான காலம்** ரமஜ்தான் மாதம் முடிந்தபின் அடுத்த ரமஜ்தான் மாதம் வருவதற்கு முன்பாகவே விடுபட்ட நாட்களுக்கான நோன்பு நிறைவேற்றப்படவேண்டும். ஃகஜ்தா செய்வதில் உடனுக்குடன் செயல்படுவது சிறந்ததாகும். விடுபட்டுள்ள அத்தனை நாட்கள் மட்டுமே அடுத்த ரமஜ்தான் மாதம் வருவதற்கு மிஞ்சியிருக்குமானால், விடுபட்ட நாட்களுக்கான நோன்பு நிறைவேற்றப்படுவது வாஜிபானதாக ஆகிவிடும். எந்த நாட்களில் நோன்பு நோற்பது அனுமதிக்கப்பட்டுள்ளதோ அந்த நாட்களில் மட்டுமே விடுபட்ட நோன்பு நோற்கவேண்டும், தடுக்கப்பட்ட நாட்களான பெருநாளுடைய நாட்கள் ஆகியவற்றில் இந்த நோன்புகள் நிறைவேற்றப்பட்டால் எவ்விதப் பலனும் இல்லை. ரமஜ்தான் மாதத்தில் விடுபட்ட நோன்பினை நிறைவேற்றுவதில் தடங்கலின்றி தொடர்ந்து நோற்பது, குறிப்பாக ரமஜ்தான் மாதம் முடிந்தவுடனே கடமை நிறைவேற்றப்படும் வகையிலும், காரணமின்றிச் தாமதிக்காமலும் அதனைத் தொடர்ந்தோ அல்லது விட்டுவிட்டோ நிறைவேற்றிவிடுவது சிறந்தது என்றாலும் அது கட்டாயமல்ல.

**நோன்புக்கான பரிகாரம் (கஃப்ஃபாரா)** ரமஜ்தான் மாதத்தில் காரணமின்றி நோன்பு நோற்காமலிருந்தாலும் அல்லது நோன்பை முறித்துக் கொண்டாலும் அந்த நாட்களுக்குப்பதிலாக நோன்பு நோற்பதுடன் அதற்கான பரிகாரமும் **கஃப்ஃபாரா** கட்டாயமானதாக ஆகிவிடுகிறது. இந்தப் பரிகாரம் மூன்று வகைகளில் நிறைவேற்றப்பட்வேண்டும்.

**1** **முஸ்லிமான அடிமை** விடுதலை செய்வது.

**2** **இரண்டு மாதங்கள் தொடர்ச்சியாக ஒன்றுவிடாமல் நோன்பு நோற்பது** இடையில் ஈதுல் அஜ்த்ஹா அல்லது ரமஜ்தான் மாத நோன்பு அல்லது வேறு எந்தக் காரணமும் இடையிட்டாலும் இந்தப் பரிகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக ஆகாது. இருப்பினும் நேர்ச்சையான நோன்புகள் இடையிட்டால் கஃப்ஃபாரா பூர்த்தியாகிவிடும். நேர்ச்சையின் காரணமான நோன்புகள் இவ்விஷயத்தில் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படாது.

3 **60 ஏழைகளுக்கு உணவளிப்பது** தானியமும் கொடுக்கப்படலாம், உணவாகச் சமைத்தும் கொடுக்கப்படலாம்.

**கஃப்ஃபாரா இரண்டு காரணங்களினால் இன்றியமையாததாக ஆகிவிடுகிறது**

1 **உடலுறவு**

2 **தெரிந்தே சாப்பிடுவது, குடிப்பது** (இது மாலிகி மத்ஹபின் அடிப்படையில் மட்டும்).

கஃப்ஃபாரா நிறைவேற்றுவதில் அதற்கான முறை கடைபிடிக்கப்படவேண்டும், அதாவது, ஒரு முஃமினானவர் ஒரு அடிமையை விடுதலை செய்யும் ஆற்றல் பெற்றிருப்பாரேயானால், அவர் நோன்பு நோற்பது சரியானதாக ஆகாது. அவ்வாறே, ஒருவர் நோன்பு நோற்கும் ஆற்றல் பெற்றிருப்பாரேயானால், அவர் ஏழைகளுக்கு உணவளிப்பது போதுமானதாகாது. எவரும் இந்த மூன்றில் எதுவுமே செய்யும் ஆற்றலற்றவராக இருப்பாரேயானால், அவர்மீது எதுவும் கட்டாயமானதல்ல. இருப்பினும், அவர் மிக அதிகமாகவே இஸ்திங்கஃபார், பாவமன்னிப்புக் கோரவேண்டும். அவருக்கு வசதி ஏற்பட்டால் 60 ஏழைகளுக்கு உணவளிக்கவேண்டும். இன்றைய சூழ்நிலையில் அடிமைகள் இருப்பதில்லை என்ற வகையில், இது செயல் வடிவில் நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும், இருந்தபோதிலும், இந்த விதிமுறை இறுதிநாள் வரையில் இஸ்லாமியச் சட்டமாக நிலைத்திருக்கும். இந்தக் கஃப்ஃபாரா ஒரு நோன்பிற்கானது, ஒன்றிற்கு மேற்பட்ட நோன்புகள் விடுபட்டிருக்குமேயானால் ஒவ்வொரு நாள் நோன்பிற்கும் தனித் தனியாக கஃப்ஃபாரா பரிகாரமாக நிறைவேற்றப்படவேண்டும்.

www.uzairfalahi.com

**ஃபித்யா**

ஏழைகளுக்கு உணவளிப்பது ஃபித்யா எனப்படும். இது கீழ்க்காணும் வகையில் நிறைவேற்றப்படும்.

1 **ஒருவர் நோன்பு நோற்கும் ஆற்றல் இல்லாத அளவிற்கு வயது முதிர்ந்துவிடுதல்.**

2 **நிவாரணமடையும் வாய்ப்பு அல்லது நம்பிக்கையோ இல்லாத நோயாளி**

3 **கர்ப்பிணிப்பெண் அல்லது குழந்தைக்குப் பாலூட்டும் பெண்** தன்னுடைய அல்லது தன் குழந்தையின் ஆரோக்கியத்திற்கு பாதகம் ஏற்படும் என்று அஞ்சினால்

## இறந்துவிட்டவர் சார்பாக விடுபட்ட நோன்புகளை நிறைவேற்றுதல்

விடுபட்ட நோன்பினை நிறைவேற்றுவதில் அவசரம் காட்டவேண்டும், தாமதிப்பது சரியல்ல. ஏனெனில், மனிதனுடைய வாழ்க்கைக்கான எந்த உத்திரவாதமுமில்லை, எப்போது முடிவுக்கு வரும் என்பது யாருக்கும் தெரியாது, கட்டாயக் கடமை நிறைவேற்றப்படாமலே இருந்துவிடலாம். நிச்சயமாக, அல்லாஹ் தஆலா கடுமையாக கணக்கு கேட்பவனாக இருக் கிறான். எவர்மீதும் ரமஜ்தான், நேர்ச்சை அல்லது கஃப்ஃபாராவிற்கான நோன்புகள் விடுபட்டிருந்து அவரிடம் அதற்காக கால அவகாசம் இருந் தும் அவர் ஏதோ காரணத்தினால் அதனை நிறைவேற்றாத நிலையில் அவ ருக்கு திடீரென மரணம் நிகழ்ந்துவிட்டால், இந்நிலையில் மார்க்கச்சட்ட அறிஞர்கள் கூறுகிறார்கள் அவருடைய நெருங்கிய உறவினர்கள்மீது அதனை நிறை வேற்றுவது வாஜிபாகும். அவற்றை முழுமையாகவோ அல்லது அதன் ஒரு பகுதியோ நிறைவேற்றலாம். இறந்தவருக்கு உறவினர் கள் யாருமில்லையெனில் அவர் விட்டுச் சென்ற செல்வத்திலிருந்து எவருக் கும் ஒரு தொகையைக் கொடுத்து நோன்பு நோற்க ஏற்பாடு செய்யலாம். ஏனெனில், இதுவும் அல்லாஹ்வுக்கான ஒரு கடனாகவே உள்ளது, மற்றக் கடன்களைவிடவும் இந்தக்கடன் முன்னுரிமை பெறுகின்றது, அதனை நிறைவேற்றவேண்டும். இறந்தவருடைய உறவினர்கள் இந்த நோன்பை நிறைவேற்ற மறுத்து விட்டால் அனைவருமே பாவம் செய்தவர்களாகக் கருதப்படுவார்கள், இறந்தவர் இந்த நோன்பு நிறைவேற்றும் கடமையிலி ருந்து விடுபட்டுவிடுவார். ஏனெனில், அவருடைய மரணத்திற்குப்பின்பு நோன்பு நிறைவேற்றப்படுவது அவருடைய உறவினர்கள்மீது மாற்றப் படுகிறது. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

مَنْ مَات وعَلَيْهِ صِيَامٌ صَامَ عَنْهُ وَلِيُّهُ

பொருள்: எவரும் மரணித்துவிட்டால், அவருடைய கடமையான நோன்பு விடுபட்டு இருக்குமானால், அந்த நோன்பினை நிறைவேற்றுவது அவரு டைய நெருங்கிய உறவினர்களுடைய பொறுப்பாகும் (புக்ஹாரி, முஸ் லிம், அபூ தாவூத், இப்னு மாஜா).

சில மார்க்கச்சட்ட அறிஞர்கள் கூறுகிறார்கள், இறந்தவருடைய விடுபட்ட நோன்புகள் அவருடைய உறவினர்கள் நிறைவேற்றத்தேவையில்லை. ஏதோ காரணத்தினாலோ, நோய்வாய்ப்பட்டு, பிரயாணம் ஆகிய காரணத்தினால் நிறைவேற்றாமல் விட்டுவிட்டு இறந்துவிட்டால் அதனை மீண்டும் நிறை வேற்றத்தேவையில்லை, அவர்மீது குற்றமுமில்லை. ஏனெனில், அவருக்கு அதனை நிறைவேற்றுவதற்கான கால அவகாசம் கிடைக்கவில்லை.

* * *



www.uzairfalahi.com